Student/Registration Number | | | | | | | | | | | Centre Number | | | | | | |

# 2020 Public Examination

# Tamil
## Continuers Level

**Tuesday 20 October: 2 pm Australian Eastern Daylight Time**

Reading Time: 10 minutes
Working Time: 2 hours and 30 minutes

- *You have 10 minutes to read all the papers and to familiarise yourself with the requirements of the questions. You must not write during this time.*
- *Monolingual and/or bilingual printed dictionaries may be consulted during the reading time and also during the examination.*

## Section 1: Listening and Responding (30 marks)

**Instructions to Students**

1. Allow approximately 40 minutes for Section 1.
2. Write all your answers to the questions in Section 1 in this booklet in black or blue pen. Space is provided for you to make notes.
3. You must answer ALL questions in Part A and Part B.
4. Answer Part A in ENGLISH and Part B in TAMIL.
5. Write your student/registration number and the centre number (if required) on the front cover of this booklet.
6. All question booklets will be collected at the end of the examination.

*© Victorian Curriculum and Assessment Authority 2020*

**Part A** (Questions 1–3)
(15 marks)

---

*Your response will be assessed on how well you:*

- *understand general and specific aspects of texts by identifying and analysing information and convey the information accurately and appropriately.*

---

You will hear THREE texts. Each text will be played twice. There will be a short break between the first and second playings of each text. You may make notes at any time.

Listen carefully to each text and then answer the questions in ENGLISH.

**Marks** | You may make notes in this space. These notes will NOT be assessed.

**Text 1**

1. (a) Where did this conversation take place? **1**

(b) What evidence in the text shows that the women are thoughtful towards their guest? **4**

Marks

You may make notes in this space. These notes will NOT be assessed.

**Text 2**

2. (a) What is the purpose of this announcement? **2**

(b) Using examples from the text, describe the significant transformations that will result from the physical changes. **3**

Marks

You may make notes in this space. These notes will NOT be assessed.

**Text 3**

3. (a) What are the reasons for Sivahami's confusion at the beginning of the conversation? **2**

(b) How do we know that Nadesan and Sivahami consider this a serious matter? **3**

**Part B** (Questions 4–6)
(15 marks)

*Your response will be assessed on how well you:*

- *understand general and specific aspects of texts by identifying and analysing information and convey the information accurately and appropriately.*

You will hear THREE texts. Each text will be played twice. There will be a short break between the first and second playings of each text. You may make notes at any time.

Listen carefully to each text and then answer the questions in TAMIL.

**Marks**

You may make notes in this space. These notes will NOT be assessed.

**Text 4**

4. What actions should the father of this girl take to please David? **5**

   டேவிட்டைத் திருப்திப்படுத்த, இப்பெண்ணின் தந்தை என்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்?

Marks

You may make notes in this space. These notes will NOT be assessed.

**Text 5**

5. (a) Describe the setting of this story. **2**

இந்தக் கதை இடம்பெற்ற பின்னணியை விபரிக்க.

(b) Explain how the statement 'You are perfectly right' expresses the real intention of the lord towards his workers. **3**

'நீங்கள் சொல்வது முழுக்கச்சரிதான்' என்ற கூற்று, எவ்வாறு பிரபுவின், பொதுவாக எசமானர்களின் வேலையாட்கள் தொடர்பான, நிஜமான உள்நோக்கத்தை வெளிப்படுத்துகிறது என்பதை விளக்குக.

Marks | You may make notes in this space. These notes will NOT be assessed.

**Text 6**

6. (a) Describe the situation in which this conversation takes place. **2**

இந்த உரையாடல் இடம்பெறுகின்ற சூழ்நிலையை விபரிக்குக.

(b) Explain why Bahirathy is likely to be employed in this shop. **3**

பகீரதி இக்கடையில் வேலைபெறக்கூடும் என்பதற்கான காரணங்களை விளக்குக.

**End of Section 1**

BLANK PAGE

Student/Registration Number | | | | | | | | | | | Centre Number | | | | | | |

# 2020 Public Examination

# Tamil
## Continuers Level

## Section 2: Reading and Responding (25 marks)

**Instructions to Students**

1. Allow approximately 1 hour and 10 minutes for Section 2.
2. Write all your answers to the questions in Section 2 in this booklet in black or blue pen.
3. You must answer ALL questions in Part A and Part B.
4. Answer Part A in ENGLISH and Part B in TAMIL.
5. Write your student/registration number and the centre number (if required) on the front cover of this booklet.
6. All question booklets will be collected at the end of the examination.

© Victorian Curriculum and Assessment Authority 2020

**Part A** (Questions 7–8)
(10 marks)

---

*Your response will be assessed on how well you:*
- *understand general and specific aspects of texts (for example, by comparing, contrasting, summarising and/or evaluating) and convey the information appropriately.*

---

7. Read the text and then answer in ENGLISH the questions that follow.

**பெற்றோர்களே/பாதுகாவலர்களே!**

எமது பாடசாலையில் வருடந்தோறும் மாணவர்களிடையே இல்லத்தலைவர்கள் விவாதக்குழுத்தலைவர்கள் ஆகியோர் தெரிவுசெய்யப்பெற்று வருகிறார்கள் என்பதை நீங்கள் அறிவீர்கள். இவர்களைத்தவிர, மாணவர்களுக்குத் தலைமைத்துவப்பண்புகளை விருத்திசெய்யும் அதேவேளை, பாடசாலையில் நல்லொழுக்கத்தையும் கற்றற்சூழலையும் மேலும் மேம்படுத்தும் வகையில் **2021**ஆம் ஆண்டுமுதல் **7–11**ஆம் வகுப்பு மாணவர்களிடையேயிருந்து சில தலைவர்களைத் தெரிவுசெய்து அவர்களுக்குப் பயிற்சிகள் வழங்கி அவர்களைப் பாடசாலைச்செயற்பாடுகளில் ஈடுபடுத்தவேண்டும் என்று எமது பாடசாலைச் சபை (கவுன்சில்) தீர்மானித்துள்ளது.

தெரிவுகள் பின்வருமாறு நடைபெறும்.

எழுத்துமூலம் விருப்பந்தெரிவிக்கும் மாணவர்களின் பெயர்ப்பட்டியல் ஆசிரியர்களுக்கு மின்னஞ்சல் செய்யப்படும். ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் தாம் விரும்பும் பெயர்களைத் தனிப்பட்டமுறையில் தெரிவுசெய்வர். அதிக ஆசிரியர்களால் தெரிவுசெய்யப்பெறும் முதல் பதினைந்து மாணவர்களின் பெயர்கள் எல்லா மாணவர்களினதும் இரகசிய வாக்குகளுக்கு விடப்பெறும். பெரும்பான்மையான மாணவர்களால் தெரிவுசெய்யப்பெறும் முதல் பத்து மாணவர்கள், மாணவர் தலைவர்களாகப் பிரகடனப்படுத்தப்பெறுவர். அவர்களில் சிரேட்ட தலைவராக வர விரும்புபவர்கள் ஒவ்வொருவராக, தாம் எவ்வாறு மேலேகுறிப்பிடப்பெற்ற நோக்கங்களைப் பாடசாலை அடையும்வகையில் உதவவுள்ளார்கள் என்பதை, பாடசாலைக் கவுன்சிலின் முன்னிலையில் விளக்கிச்சொல்லவேண்டும். அவற்றுள் மிகச்சிறந்த விளக்கத்தின் அடிப்படையில், அச்சபை ஒரு தலைவரைத் தெரிவுசெய்யும். அவரே அவ்வருடத்துக்கான சிரேஷ்ட மாணவர் தலைவராவார்.

தெரிவுசெய்யப்பெறும் எல்லா மாணவத்தலைவர்களது பெயர்களும் வருடத்தின் முதலாவது மாணவர் ஒன்றுகூடலில் அறிவிக்கப்பெறும். இவர்களே எமது பாடசாலையின் பொது அறிவுப்போட்டிகள், நிதிசேகரிப்பு நிகழ்வுகள், பாடசாலைமுகாம்கள் முதலான பல நிகழ்வுகளை ஒழுங்கு செய்வார்கள். உண்மையில் இக்குழுவினர் பாடசாலைச் சமூகத்தின் முக்கிய உறுப்பினர்களாக இருந்து பாடசாலையில் சிறந்த ஒரு சூழலை உருவாக்க உதவுவார்கள்.

மேலும், இவர்கள் தமது தலைமைத்துவப்பண்பை விருத்திசெய்யவும் தமது தற்துணிவை அதிகரித்து, பாடசாலையிலும் பின்னர் தமது எதிர்காலக்கல்வியிலும் தொழிலிலும் சமூகவாழ்விலும் அவற்றைப் பயன்படுத்தக்கூடிய வகையில், பல தேசீயமட்டக் கருத்தரங்குகள், வேலைத்திட்டங்கள் என்பனவற்றை இவர்களுக்காக ஒழுங்குசெய்யப் பாடசாலைச்சபை நடவடிக்கை எடுத்துவருகிறது.

இந்தத் தகவல்களை உங்களுக்கு வழங்கும் இச்சந்தர்ப்பத்தில், ஊக்கமாகச் செயற்படும் பாடசாலைச்சபையினருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதிபர்

QUESTIONS

**Marks**

(a) Who could be selected to be a student leader? **3**

(b) How will student leaders be able to develop their personal and organisational skills? **2**

8. Read the text and then answer in ENGLISH the questions that follow.

**தமிழிசையும் மருத்துவமும்**

சிகிச்சை நோக்கத்துக்காக இசையைப் பயன்படுத்தவது இன்று உலகம் முழுவதும் பிரசித்தி பெற்றுள்ளது.

இந்தியாவின் பிரபல தமிழிசைப்போட்டியொன்றில் முதலிடம்பெற்ற சிறுமி ஒருத்தியின் தாயார், தான் அச்சிறுமி கருவிலிருக்கும்போதே அப்பிள்ளைக்கு இசையைக் கற்பித்ததாகவும், அதனை அப்பிள்ளை மிகவும் இரசித்துவந்ததைத் தான் உணர்ந்ததாகவும் கூறுகிறார். அப்பிள்ளையின் பிரசவத்தின்போது அறுவைச்சிகிச்சை செய்யவேண்டியிருக்கிறதே என்று அறுவைச்சிகிச்சை நிபுணர் தெரிவித்த நிலையில், தான் அதுவரை பாடிவந்த இராகங்களைத் தொடர்ந்து பாடியபோது சுகப்பிரவசம் நடந்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இசையால் மழையைக்கூடப் பெய்விக்கலாம் என்று பெரும்பான்மையான தமிழர்கள் திடமாக நம்புகிறார்கள். ஒவ்வொரு செயலுக்கும் குறிப்பிட்ட இராகங்களைத் தமிழர்கள் தெளிவாக வகுத்துள்ளார்கள். மேகரஞ்சினி இராகம் பாடி மேகத்தைக்கூட்டி, அமிரத்வர்சினி இராகம் பாடி மழையைப் பெய்விக்கலாம் என்று தெரிவிக்கிறார்கள். செடி கொடிகள்கூட ஆரோக்கியமாக வளர இசை உதவுகின்றதென்பது நிரூபிக்கப்பெற்றுள்ளது. தமிழிசைவல்லுனர்கள் ஐம்பதுக்கு மேற்பட்ட இராகங்களின் பெயர்களைப் பட்டியற்படுத்தி அவை ஒவ்வொன்றும் எவ்வாறு இவ்வுலகில் வாழ்கின்ற மனிதர்களின் உடல், உள்ளம், உயிர் என்பன செழுமையாக வளம்பெற்று அவர்கள் ஆரோக்கியமாக வாழ உதவுகின்றன என்று பரிந்துரைத்துள்ளார்கள். விதந்துரைக்கப்பெற்ற இராகத்தை பரிந்துரைக்கப்பெற்ற நேரத்தில் வல்லுனர்கள் இசைத்தார்களானால் இராகமருத்துவம் அதிகபலனைத்தரும்.

உண்மையில் நவீன துல்லியமான விஞ்ஞானமுறையில் கட்டுப்படுத்திய பரிசோதனைகள் மூலம் இச்சிகிச்சைமுறை, குறிப்பாக இராகங்களின் சிறப்பான நலங்கள் மேலும் நிரூபிக்கப்பெறுதல் உலகுக்கு நன்மைபயக்கும். இதன்மூலம் இந்தியாவின் யோகாப்பியாசம் இன்று உலகம் முழுவதும் ஏற்றுக்கொள்ளப் பெற்றுள்ளதுபோல இராகச்சிகிச்சை முறையும் உலகெங்கும் நிச்சயம் பயன்படுத்தப்பெறும்.

ஊசி, மருந்து, மாத்திரைகள் போலல்லாது இசைமருத்துவம் எந்தவிதமான பக்கவிளைவுகளும் அற்றது என்பதையும் அது நோயெதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கிறதென்பதையும் அறிந்துகொள்ளவேண்டும்.

தாயின் தாலாட்டு குழந்தையை உறங்கவைப்பதும், களைப்படைந்த விவசாயிகளும் மீனவர்களும் சோர்வை நீக்கி உற்சாகமாக வேலைசெய்ய இசைநயம்மிக்க நாட்டார்பாடல்களைப் பாடுவதும், கடவுள் வழிபாடுகளில் இசைக்கு முக்கியத்துவம் அளிப்பதும், பல ஆயிரம் வருடங்களாக இந்தியாவில் இடம்பெறுவதை நாமறிவோம். இங்கே இசைமருத்துவம் வேதகாலம் முதல் உபயோகிக்கப்பட்டதாக அக்காலத்தில் எழுதப்பெற்ற உபநிடதங்கள் காட்டுகின்றன.

மேல்நாடுகளில் இசைமருத்துவம் இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியளவில் ஆரம்பிக்கப்பெற்றது. இப்போது பிரசவ அறைகளிலும், முதியோரில்லங்களிலும், சிகிச்சைகளின் பின்னர் மீட்டெழவைக்கும் நிலையங்களிலும், வேலைத்தலங்கள் பலவற்றிலும் வகுப்பறைகளிலுங்கூட மெல்லிய இசை தொடர்ந்து இசைக்க ஒழுங்குகள் செய்யப்பெற்றுள்ளன. அவை கேட்பவரின் செயலாற்றல் திறனை மேம்படுத்துவதாக அறியப்பட்டுள்ளது.

இராகமருத்துவம் நிச்சயமாக இவற்றின் பயனைப் பலமடங்காக்கும்.

இராகங்களை ஒலிப்பதிவுகளிலிருந்து கேட்கும்போது உச்சப்பயனைப் பெறவேண்டுமாயின் அவை உயர்தரத்தில் பதிவுசெய்யப்பெற்று, உயர்தரமான மீட்டும் கருவியில் இசைக்கப்பெறவும் வேண்டும். மிகப்பிரதானமாக அந்த இசை பொருத்தமான டெசிபலில் (ஒலியை அளவிடும் அலகு) ஒலிக்கப்படவும் வேண்டும்.

வாழ்நாள் முழுவதும் இராகங்களில் மூழ்கி நலமாக வாழுங்கள்!

QUESTIONS

**Marks**

(a) Name **four** important benefits attributed to raga therapy. **4**

(b) According to the author, how will raga therapy extend its influence? **1**

**Part B** (Question 9)
(15 marks)

---

*Your response will be assessed on how well you:*
- *demonstrate an understanding of the stimulus text*
- *write text appropriate and relevant to context, purpose and audience*
- *structure and sequence information and ideas*
- *manipulate language structures and vocabulary in Tamil.*

---

9. Read the text and then answer the question in approximately 150 words in TAMIL on page 8.

35, டேவிட் வீதி
பிறின்ஸஸ் பார்க்
கிங்ஸ்லான்ட்
30 09 2020

அன்புநிறைந்த மாதவனுக்கு, சகாதேவனின் தாயார் பிறேமினி எழுதுவது.

மாதவா,

இப்படி ஒருகடிதத்தை நீர் எதிர்பார்த்திருக்கமாட்டீர். இப்படியும் ஒரு இரகசிய முயற்சி எடுத்துப்பார்ப்போமே என்றெண்ணி இதை எழுதுகிறேன். சகா இப்போது மூன்றுமாதமாக முற்றாக மாறிவிட்டான் என்பதை நான்கூறித்தான் நீர் அறியவேண்டும் என்றில்லை. ஆனால் நான் எப்போதும் போலவேதானே இருக்கிறேன் என்று கூறிவிட்டுத் தனது அறைக்குள்ளே போய்விடுகிறான். எனது அம்மா ஜூலையில் இங்கிருந்து தனது தம்பி வீட்டில் வசிக்கப்போன பின் அவனுக்குத் தனியறை உண்டு.

ஏன் இவ்வாறு மாறிவிட்டான் என்றோ, இப்படி மாறிவிட்டதற்கு பெற்றோர் என்றவகையில் நாங்கள்தான் காரணமாயிருக்கிறோமென்றோ எமக்குத் தெரியவில்லை. நானோ அவனது தகப்பனோ எமது மனப்பாங்கில் அல்லது அவனுடன் தொடர்புகொள்ளும்வகையில் ஏதேனும் மாற்றம் செய்யவேண்டுமாயின் அதற்கு ஆயத்தமாகவும் இருக்கிறோம்.

சகா தகப்பனின் பிறந்தஊரில் அவர்கற்ற பாடசாலையில் ஒருவருடம் படிக்கப்போவதாகக் கேட்டான். இப்போது இந்நாட்டைவிட்டுப் போகவேண்டாம் என்றும் இரண்டு வருடங்களில் இங்கே பாடசாலைக்கல்வியை முடித்தபின் அங்குசென்று சிலகாலம் செலவிடலாம் என்றுஞ்சொன்னோம்.

மருத்துவத்துறைக்காகப் படிப்பது, குறிப்பாக இரசாயனவியல் கற்பது கஷ்டமாக இருந்தால் தனியார் போதனைக்கு ஒழுங்கு செய்யலாம் என்று தெரிவித்துள்ளேன். உயர்தரவகுப்புப் படிப்புடன் பகுதிநேரவேலைசெய்வது சிரமமாகஇருந்தால் இரண்டு வருடங்களுக்குப் படிப்பை மட்டும் கவனித்துக்கொண்டு வேலையை விடும்படியும் அவனுக்குத் தெளிவாகச் சொல்லிவிட்டேன்.

அவனது மிகநெருங்கிய தோழர்களில் வனிதா யூலையில் அயல்மாநிலத்துக்கு இடம்மாறிப்போனபின்னர், உம்முடன் மட்டும்தான் நான் உதவிகேட்கமுடியும். வனிதாவுடன் எனக்கு இப்போது தொடர்பில்லை. தயவுசெய்து அவனுடன் பேசி எனக்கு ஒரு நல்ல ஆலோசனை சொல்லவும்.

அன்புடன்

பிறேமினி

QUESTION

You are Mathavan. You have had a conversation with Sahathavan. Write a letter to Premini in which you outline Sahathavan's thoughts and feelings.

உம்மை மாதவனாகக் கருதிக்கொள்ளும். நீர் சகாதேவனுடன் ஒரு உரையாடலை நடத்தியுள்ளீர். அந்த உரையாடலின் போது வெளிப்பட்ட அவனது எண்ணங்களையும் உணர்வுகளையும் சுருக்கமாத் தெரிவித்து, பிறேமினிக்கு ஒரு கடிதம் எழுதுக.

---

You may make notes in this space. These notes will NOT be assessed.

*Do not remove this page from the question booklet.*

| Student/Registration Number | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|

| Centre Number | | | | | | |
|---|---|---|---|---|---|---|

Tamil
Continuers Level

Question 9

**End of Section 2**

BLANK PAGE

Student/Registration Number | | | | | | | | | | | Centre Number | | | | | | |

# 2020 Public Examination

# Tamil
## Continuers Level

### Section 3: Writing in Tamil (20 marks)

**Instructions to Students**

1. Allow approximately 40 minutes for Section 3.
2. Write your answer to a question from Section 3 in this booklet in black or blue pen. Space is provided for you to make notes.
3. You must answer ONE question in TAMIL.
4. Write your student/registration number and the centre number (if required) on the front cover of this booklet.
5. All question booklets will be collected at the end of the examination.

© *Victorian Curriculum and Assessment Authority 2020*

**Section 3** (Questions 10–12)
(20 marks)

*Your response will be assessed on how well you:*

- *demonstrate depth of treatment of information, ideas and/or opinions*
- *write text appropriate and relevant to context, purpose and audience*
- *structure and sequence information and ideas*
- *manipulate language structures and vocabulary in Tamil.*

Answer ONE question from this section in approximately 250 words in TAMIL.

10. Some Tamil-speaking people plan to establish a Tamil-language preschool. You went to an English-language preschool and you have recently completed work experience there. You like the idea of Tamil-language preschools. You have been asked to give a speech about this plan at a Tamil community meeting. Write the script of your speech, using relevant information to support your view and to persuade the Tamil community to support the Tamil-language preschool.

    இங்குள்ள சில தமிழர்கள் தமிழ்ச் சிறுவர்களுக்கான தமிழ்மொழிமூல முன்பள்ளிகளை இங்கே ஆரம்பிக்க எண்ணுகிறார்கள். ஒஸ்ரேலியாவிலுள்ள ஆங்கில மொழிமுலம் நடத்தப்பெற்ற ஒரு முன்பள்ளியில் கற்றும், அதே பள்ளியில் அண்மையில் வேலையனுபவமும் பெற்றவர் நீர், தமிழ் முன்பள்ளி ஆலோசனையை விரும்புகிறீர். தமிழ்ச் சமூகத்தினர் கூட்டம் ஒன்றில் இது தொடர்பான கருத்துக்களைத் தெரிவிக்குமாறு கேட்கப்பெற்றுள்ளீர். கேட்கவந்துள்ள தமிழர்களுக்குப் பொருத்தமான தகவல்களை வழங்கி, அவர்கள் தமிழ்முன்பள்ளிகளை ஆதரிக்க ஊக்குவிக்கும் வகையில் நீர் ஆற்றவுள்ள உரையின் பனுவலை எழுதுக.

11. Write an article for the newspaper *Tamil's Voice*, evaluating the extent to which women's rights and gender equality affect ancient Tamil traditions.

    பெண்களுக்கான உரிமை, ஆண்பெண் சமத்துவம் போன்ற கருத்துக்கள், எந்த அளவுக்குப் பழைமைவாய்ந்த தமிழர் பண்பாட்டின் சிறப்பம்சங்களில் தாக்கம் விளைவிக்கின்றன என்று மதிப்பீடு செய்து, தமிழரின் குரல் பத்திரிகைக்கு ஒரு மதிப்பீட்டுக் கட்டுரை எழுதுக.

12. Write a descriptive report about the idea that everyone must learn self-defence techniques. Your report will be published in a brochure for school students.

    ஒவ்வொருவரும் தற்காப்பு நுட்பங்களைக் கற்றுக்கொள்ளல் அவசியம் என்பதை விளக்கி, பாடசாலை மாணவரிடையே விநியோகிப்பதற்கு ஏற்றமுறையில், ஒரு அறிக்கை எழுதுக. இது பாடசாலை மாணவருக்கு வழங்கப்படவுள்ள செய்திப்பிரசுரம் ஒன்றில் பிரசுரிக்கப்பெறவுள்ளது.

You may make notes in this space. These notes will NOT be assessed.

Question Number:

**End of Section 3**